உ
சிவமயம்



அமரர்

# பொன்னையா பார்வதிப்பிள்ளை

அவர்களின் சிவபதபேறு குறித்த

# நினைவுச் சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.07.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வட்டக்கச்சியை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# பொன்னையா பார்வதிப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுச்சுடர்

2017.07.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

எமையெல்லாம் வையத்தில் வாழ்வாங்கு வாழ வைத்து அல்லும் பகலும் அயராது பாடுபட்டு இரவைப் பகலாக்கி இரத்தத்தை வியர்வையாக்கி தன்னை உருக்கிப் பிறருக்கு ஒளியைக் கொடுக்கும் மெழுகுவர்த்தியைப் போல் எம்மையெல்லாம் வாழவைத்த அன்புத் தெய்வம் எம்மை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சென்றுவிட்ட எம் அன்னையே ! உமை நினைத்து நெஞ்சுருகக் கண்ணீர் சிந்தி நெய்விளக்கேற்றிடும் இவ்வேளையில் அன்னையின் பிரிவுகுறித்து வெளியிடும் இம் மலரினை அவரது பாதார விந்தங்களில் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

**– காணிக்கை –**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அன்னை மடியில்
19.08.1937

அரங்கனின் அடியில்
30.06.2017

# அமரர் பொன்னையா பார்வதிப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## திதி நிர்ணய வெண்பா

பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமனடி
நண்ணிய பார்வதிப்பிள்ளை சென்ற – நாள்
ஏவிளம்பி வருட ஆனித்திங்கள் முப்பதாம் நாள்
பூர்வபக்க ஸப்தமியெனக் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## பஞ்ச தோத்திரங்கள்

### தேவாரம்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால்வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரை ஆர் கழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ! உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதுஅருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## தேற்றம்

"பிறக்கும் உயிரெல்லாம் பெரும் வினையைத் தானறுத்து
இறக்கும் என்பதுவே இறைவகுத்த விதியாகும்
சிறக்கும் நல்வாழ்வு வாழ்ந்த பெருமகனார்
பேரின்பம் தேடினார் தேறு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் பொன்னையா பார்வதிப்பிள்ளை அவர்களின் வாழ்வின் வசந்தம்

இயற்கை எழில் கொஞ்சும் ஈழவளத் திருநாட்டில் செல்வச் செழிப்பும், வற்றாத நீர்வளமும், குன்றாத வனப்பும் பல்கிப் பெருகும் யாழ்மண்ணில் எல்லா வளங்களும் ஒருங்கே அமையப்பெற்று வளங்கொழிக்கும் இடைக்காடு எனும் பசுமைகள் நிறைந்த ஊரிலே முருகுப்பிள்ளை நாகப்பிள்ளை தம்பதியரின் மணிவயிற்றிலே கடைக்குட்டியாகப் பார்வதிப்பிள்ளை அவதரித்தார்.

இவர் எல்லோருக்கம் இளையவராக இருந்தமையால் இவர்மீது சகோதரியான தெய்வானைப்பிள்ளையும் சகோதரர்களான கணபதிப்பிள்ளை, சின்னராசா ஆகியோர் அளவிடமுடியாத பற்றுடனும், பாசத்துடனும் கொஞ்சிக்குலாவி எல்லையற்ற அன்புடனும் பரிவுகாட்டி வந்தனர்.

நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக வளர்ந்த இவர் கல்விகற்கும் பராயத்தை அடைந்ததன் பயனாக இடைக்காடு மகாவித்தியாலயத்திலே தனது கல்வியைச் சீருடனும் சிறப்புடனும்கற்றுத் தேறினார். இவர் தனது பருவ வயதினை அடைந்ததும் இவருக்கு ஏற்ற மணாளனாக அவ்வூரிலே வதியும் சங்கரப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் இளைய புத்திரனான பொன்னையா எனும் வாலிபனை மணம்முடித்து வைத்தனர். இவர்களின் இல்லறம் எனும் நல்லறமானது இனிதே அமைந்ததன் பயனாக பிள்ளைச் செல்வங்கள் என எழுவரைப் பெற்றெடுத்தனர்.

நாகேஸ்வரி, சத்தியேஸ்வரி எனும் இரு பெண் பிள்ளைகளையும் கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், இலங்கேஸ்வரன் (அமரர்), பரமேஸ்வரன், கமலேஸ்வரன் எனும் ஐவரையும் கண்ணை இமை காப்பது போல அன்புடனும் பரிவுடனும் பக்குவமாக வளர்த்தெடுத்த போதிலும் கண்ணூறு பட்டதுபோல காலனவன் ஐவரிலும் துடிப்பும் செயற்றிறனும் கொண்ட இலங்கேஸ்வரன் எனும் மகவைப் பரிதவிக்க எடுத்துச் சென்றான். இதனால் அன்னையவள் துடியாய்த் துடித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ன ஆகாரமின்றி துவண்டுபோனாள். காலங்கள் மெல்ல மெல்ல உருண்டோட அவரின் நினைப்பிலிருந்து விடுபட்டு ஏனை அறுவர் மீதும் பாசமழை பொழிந்து அவர்களைப் பேணி வளர்த்துப் பெருங்கல்வியூட்டி மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிசமைத்தார்.

பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பூரிப்படைந்த அன்னையவள் பிள்ளைகளின் பருவ வயதிற்கேற்ப அவர்களுக்கேற்ற மணமக்களை மணம்முடித்து வைக்கவும் தவறவில்லை. நாகேஸ்வரி எனும் நன்மாதுவிற்கு பத்மநாதன் எனும் மணாளனை மணம்முடித்து வைத்ததன் பயனாக பமீலா, பர்மிலா, கேமிலா, சகிலா, தர்மிலா எனும் பேரக்குழந்தைகளை இனிதே கண்டு மனம் மகிழ்ந்தார்.

இரண்டாவது மகளான சத்தியேஸ்வரி எனும் நன்மங்கைக்கு ஸ்ரீஸ்கந்தராசா எனும் வாலிபனை மணம்முடித்து வைத்ததன் பயனாக சர்மிளா, சுதர்ஷன், சாமினி எனும் பேரப்பிள்ளைகளை இனிதே கண்டு உளமார மகிழ்வடைந்தார்.

ஆண்மகனான கேதீஸ்வரன் எனும் மூத்த புதல்வனுக்கு மதிவதனி எனும் கன்னிகையை மணம்முடித்து வைத்ததன் பயனாக சாரங்கன், சாருஜா, தனுஷா எனும் பேரக்குழந்தைகளை அரவணைத்து இன்பமும் கண்டார்.

ஜெகதீஸ்வரன் எனும் மகனுக்கு தர்ஷினி எனும் நங்கையை மணம்முடித்து வைத்ததன் நற்பயனாய் ஜெயதனுஷன், தனுஷா எனும் பேரன் பேர்த்தியைக் கண்டு அன்பு ததும்பப் புழகாங்கிதமடைந்தார்.

பரமேஸ்வரனுக்கு சிவாஜினி எனும் நல்லாளை மணம்முடித்து கேதாரகன் எனும் பேரனைக் கண்டு களிப்படைந்தார். கடைக்குட்டியான கமலேஸ்வரனுக்கு வனிதறஞ்சினி எனும் பெண்ணை மணம்முடித்து வைத்ததன் பேறாக விதுஷா, கஜானனன் எனும் பேரக்குழந்தைகளைக் கண்டு பரிவுடனே வாழ்ந்து வந்தார்.

பேரக்குழந்தைகளும் சீரும் சிறப்புடனும் கற்றுத் தேறினர். அவர்களுக்கேற்ற பருவ வயதினை அடைந்ததும் அவர்கள் நல்மணம் புரிந்ததன் பயனாகப் பூட்டப்பிள்ளைகள் எனும் நன்முத்துக்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஜீத்தனன், கவியரசன், விதுஷி, மயூரிகா, மயூரதன், நிவேதிகன், அரங்கன், டனியா, கரிசியன் ஆகியோரை வாய்க்கப்பெற்று இன்பத்தில் திழைத்திருந்தார். தனது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் எவ்விதமானநோய் நொடிகளுமின்றி வாழவேண்டும் எனும் எண்ணத்தை உடையவராக அருகில் இருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கம் மாயவனின் கழலடிகளை அனுதினமும் தவறாது மூவேளையும் வழிபட்டு வந்தார். மார்கழி மாதம் வருகின்ற திருப்பாவைப் பூசை வழிபாடுகளில் கூட அதிகாலை இரண்டு மணிக்கு எழுந்து நீராடிக் கணவன் மனைவி இருவரும் அரங்கனின் திருக்கதவு திறக்கும் அருட்காட்சியைக் கண்குளிர இனிதே கண்டு மகிழ்வர்.

இவ்வாறாக அனுதினமும் இறைவனின் ஆலயம் செல்வதும் அவனின் கழலடிகளைப் பணிவதும், பணிவிடைகள் செய்வதும், பூஜை பஜனைகளில் கலந்து கொள்வதுமாகத் தனைமறந்து மாயவனின் பாதார விந்தங்களையே பணிந்து வந்தார். அவ்வாறு பணிந்து வரும் நாளில் ஒரு ஞாயிற்றுக்கிழமை அரங்கனின் ஆலய தெற்கு வாயிலில் பூஜை வழிபாடுகள் நடைபெற்ற வண்ணம் இருந்தவேளை அவரை அறியாமலே பூமியிலே சரிந்தார். அன்று சரிந்தவர்தான் அதன்பின் அவரால் எழுந்து நடக்கவே முடியாமல் படுத்தபடுக்கையாக ஈரிரண்டு வருடங்கள் அகன்றன. படுத்த படுக்கையாக இருந்த வேளையிலும் கூட மாயவனின் நாமங்களை உச்சரிக்கத் தவறுவதில்லை.

மன்மத வருடம் தைத்திங்கள் இருபத்தைந்தாம் நாள் கணவனின் பிரிவுஇவரை வாட்டி வதைத்தது. "துணையிழந்த அன்றிலைப் போல" துவண்டார். என் செய்வது கணவனின் நினைவுடன் ஓராண்டுகள் கழிந்தது. எல்லோருடனும் கதைத்துப் பேசி மகிழ்ந்திருந்த நல் மகிழ்ச்சியான தருணமதில் தன்கடமை முடிந்ததென 30.06.2017 வெள்ளிக்கிழமை நண்பகல் 1.50 மணியளவில் பூர்வபக்க ஸப்தமி நன்னாளில் பிள்ளைகள், பேரக்குழந்தைகள், மருமக்கள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், அயலவர்கள் ஏங்கியழ பரந்தாமனின் பாதக்கமலங்களில் குடியிருக்கும் விருப்போடு மண்ணுலகைத் துறந்தார்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் குடும்ப ஒளி தீபங்களுக்கு கண்ணீரால்
## எம் சமர்ப்பணம்





| | | | |
|---|---|---|---|
| **தோற்றம்** | **மறைவு** | **தோற்றம்** | **மறைவு** |
| **1935.10.23** | **2016.01.25** | **1937.08.11** | **2017.06.30** |

**அமரர்**
**சங்கரப்பிள்ளை பொன்னையா**

**அமரர்**
**பொன்னையா பார்வதிப்பிள்ளை**

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து இன்று எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்ற எம் பெற்றோர்களே ! கண்ணீரால் உம் பாதக்கமலங்களைக் கழுவுகின்றோம். நீங்கள் விண்ணுலகில் இனிதே வீற்றிருக்க......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோத்திரம்

## சூரியன் / ஞாயிறு

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## சந்திரன் / திங்கள்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் போற்றி
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீரப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய் / அங்காரகன்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு

## புதன் / புலவன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந் தந்தாள்வாய் பண்ணொலியானே
உதவியே அருளும் உத்தமா போற்றி

## வியாழன் (குரு) / பிரகஸ்பதி

குணமிகு வியாழக் குரு பகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப்பர குருநேசா
க்ரஹ தோஷமின்றிக் கடாக்ஷித்தருள்வாய் போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுக்கிரன் / வெள்ளி

சுக்கிர மூர்த்தி சுபசுகம் ஈவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

## சனீஸ்வரன் / சனி

சங்கடந் தீரப்பாய் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தாதா

## இராகு / ரௌத்ரன்

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியோ ரம்மியா போற்றி

## கேது / காலன்

கேதுத்தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீரப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி

(இந்த நவக்கிரக ஸ்தோத்திரம் சொல்வி ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒருமலர் வீதம் ஒன்பது மாலை இடவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோளறு பதிகம்

**பண்: பியந்தைக் காந்தாரம்**

**ராகம் : நவரோஸ்**

**தாளம் : திஸ்ரதிரிபுடை**

வேயுறு தோளி பங்கன்விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவைமார்பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து
என் உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு
பதினெட்டொ டுஆறும் உடனாய நாள்கள்
அவைதாம் அன்பொடு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்து
என் உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது
பூமி திசை தெய்வமான பலவும்
அறநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல்
அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனாங்கி நமனொடு தூதர்
கொடு நோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடை ஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல்
அணிந்துஎன் உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

வாள்வரி அதள தாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும்உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி
வந்தென் உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானைகேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிள முலைநன் மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவான்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான
பித்தும் வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர் சூடி
வந்தென் உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் தன்னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

பல பல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல்
அணிந்தென் உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு
தேவர் வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய் வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து
என் உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வதில் அழிவிக்கும்
அண்ணல் திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல்
துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான
முனிவன் தானுறு கோளும் நாளும்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவைந்தெழுத்துப் பதிகம்

**பண்: காந்தார பஞ்சமம்**
**ராகம் : கேதார கௌளை**
**தாளம் : ஆதி**

துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.

ஊனில் உயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவங்கமாலை

பண்: சாதாரி
ராகம் : பந்துவராளி
தாளம் : ரூபகம்

தலையே நீவணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்.

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீமுரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை
மூக்கே நீமுரலாய்.

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீற்றுப் பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவா யான்திரு நீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மாலவா யான்திரு நீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங்கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத்த வர்பணிந் தேத்தும் ஆலவா யான்திரு நீறே.

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

தந்ததுன் தன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற் கிலன்ஓர்கைம் மாறே

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தேன்
மனத்திடை மின்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப்பாயும்
திருப்பெருந்துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே

வேண்டத் தக்கது அறிவோய் நீ,
வேண்ட முழுவதும் தருவோய் நீ.
வேண்டும் அயன், மால்க்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்!
வேண்டி நீ யாது அருள் செய்தாய்,
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்,
அதுவும் உன் தன் விருப்பு அன்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே

அப்பனே, எனக்கு அமுதனே,
ஆனந்தனே, அகம் நெக அள்ளூறு தேன்
ஒப்பனே, உனக்கு உரிய அன்பரில்
உரியனாய், உனைப் பருக நின்றது ஓர்
துப்பனே, சுடர் முடியனே, துணையாளனே
தொழும்பாளர் எய்ப்பினில்
வைப்பனே, எனை வைப்பதோ, சொலாய்
நைய, வையகத்து, எங்கள் மன்னனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை யென்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

நீறணி பவளக் குன்றமே ! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே !
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா !
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே !
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிர்இல்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்கமலர்க் கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்

கற்பனை கடந்த சோதி
கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி
யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாய் நடுவு மாகி
அளவிலா அளவும் ஆகிச்
சோதியா யுணர்வு மாகித்
தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப்
பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி

தண்ணளி வெண் குடை வேந்தன்
செயல் கண்டு தரியாது
மண்ணவர் கண்மழை பொழிந்தார்
வானவர் பூ மழை சொரிந்தார்
அண்ணல் அவன் கண் எதிரே
அணி வீதி மழ விடை மேல்
விண்ணவர்கள் தொழ நின்றான்
வீதி விடங்கப் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ராகம் : சண்முகப்பிரியா தாளம் : திஸ்ரதிரியுடை

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ..... எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ..... அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ..... இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்பு யல்மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ..... ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ..... கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ..... எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ..... முதுகூகை
கொட்புற்றெழ நட்புற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல ..... பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : சுத்தசாவேரி  தாளம் : ஆதி

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி ...... அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி ...... அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி ...... வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி ...... வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் ...... வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம ...... முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு ...... மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு ...... பெருமாளே.

ராகம் : ஹம்ஸவம்வனி  தாளம் : அங்கதாளம்

உம்பர்தருத் தேநுமணிக் ...... கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் ...... துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் ...... பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் ...... றருள்வாயே
தம்பிதனக் காகவனத் ...... தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் ...... கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் ...... பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் ...... பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : காபி　　　　　　　　　　　　　தாளம் : மிஸ்ரசாபு

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய ...... குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய ...... மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு ...... மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட ...... அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு ...... சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு ...... மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி ...... லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல ...... பெருமாளே.

ராகம் : கரஹரப்பிரியா　　　　　　　　　　　தாளம் : ஆதி

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர ...... கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை ...... வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றியப ...... னிருதோளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பெனஎ னக்கருள்கை ...... மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை ...... இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை ...... தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கிநச மர்த்தனெனும் ...... அருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய ...... பெருமாளே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

**ஆனந்த மனோலயம்**
**மணிவாசகரால் தில்லையிலருளிச் செய்யப்பட்டது**
**அறுசீரடி ஆசிரிய விருத்தம்**
**தீர்த்தோற்சவத்தின்போது**
**பொற்சுண்ணம் இடிக்கும் வேளையில் பாடப்பெறுவது**

திருச்சிற்றம்பலம்
இராகம் - மோகனம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல்தீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுகின் ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்(கு)
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கரையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியார்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்துநாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக்(கு)
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே.

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தெம்மை ஆண்டவா றும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாயக்கருங்கண்
வெண்நகைப் பண்அமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து)எங்களப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கைஇரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரம் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இருள் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினாருக்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்கள்

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணவதுங் கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம் உய்யவேண்டும் என்றே அறிவாரில்லையே

"ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற பேசதொன்று வேண்டுவல்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் 1 தோதவுங் கற்பியுமே

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடைசுற்றி,
முத்தும் பவளமும் பூண்டுஓடி ஆடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச் சாம்பிணாங்கள்
கத்துங் கணக்கென்ன? காண் கயிலாபுரிக் காளத்தியே!

அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே! விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மி இரு
கைத்தலை மேல்வைத்து அழும் மைந்தரும் சுடு காடு மட்டே!
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே!

என்பெற்ற தாயாரும் என்னைப் 'பிண' மென்று இகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் 'போ' மென்று சொல்லிப் புலம்பி விட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம் வந்து குடம் உடைத்தார்
உன்பற்று ஒழிய ஒருபற்றும் இல்லை உடையவனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாப்பிளக்கப் பொய்உரைத்து நன்னிதியந் தேடி
நாம்ஒன்றும் அறியாத நறியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
கவர்பிளந்த மரத்தொளையிற்கால் நுழைத்துக்கொண்டே
ஆப்புஅதனை அசைத்துவிட்ட குரங்கனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயாருக்கு தகனக்கிரியை செய்கையிற் பாடிய வெண்பா

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாள்சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டிய தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றிய தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் உருசியுள்ள
தேனே திரவியமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் மெள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு
முன்னை இட்ட தீ முப்புறத்திலே
பின்னை இட்ட தீ தென்இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்கமூள்கவே

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்

வீட்டிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம் நல்வாழ்விற்கும், உயர்விற்கும் உழைத்து தன்னையே அர்ப்பணித்த எங்கள் அன்புத் தாய் அமரர் பொன்னையா பார்வதிப்பிள்ளை அவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்த வேளையில் அவர்களைப் பார்வையிட்டு எமக்கு ஆறுதல் வார்த்தைகள் வழங்கிய அன்பு உள்ளங்களிற்கும் அவரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் உதவிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் சுற்றத்தவர்கள் எம் துயரில் நேரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசியில் துயர் பகிரிந்தவர்களுக்கும் இணையத்தில் வெயிளிட்டுத் துயர்பகிர்ந்த உறவுகளுக்கும் சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது அன்புத் தாயின் இறுதி யாத்திரையிலும் கலந்து கொண்டவர்களுக்கும் அவரின் ஈமக்கிரியை அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்க்கும் இம்மலரினை அச்சிட்டு உதவிய தமழ்ப்பூங்கா பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி




**இல 886**
**ஆறுமுகம் வீதி,**
**வட்டக்கச்சி.**

**இவ்வண்ணம்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.



இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

தமிழ்ப்பூங்கா – 0212264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org